- 1999 - 01: Term of the first female International director, Nilofar Bakhtiar, Pakistan.
- 2003 : The women's Initiative began, women made up 14% of membership and 9% of DG's world wide women's workshop took place.
- 2010 : Lions Family Cub Program was developed to encourage families to volunteer together.
- 2011-12 : Past International President Tam developed the Women's and family membership development task force.
- 2012 - 13 : International President Madder continued the task force..
- 25% of women in Lions worldwide as of March 31, 2013.
- 2018 - 19 : Lions International first female President was elected and installed - Lion Gudrun Yngvadottir from Iceland.
- 2023-24 : Lion Dr.Patti Hill is the International President.

# *A Proud Moment : First Woman to Head Lions Club Worldwide*



Women are not only serving their Communities but donning the mantle of leadership with grace, strength and confidence. In 2013, Lions get their first Woman International President Gudrun Yngvadottir, and it was under her leadership that the New Voices Initiative was launched.

Gudrun Yngvadottir, from Gardabaer Iceland was elected to serve as International President at 101st International Convention, held in Las Vegas, Nevada, USA. She is a biomedical scientist and has worked in research, education and management.

A member of the Gardabaejar Eik Lions Club since 1998, she has held many offices within the association. She has dedicated her service to Children and youth, membership and leadership development, health and wellness including vision and diabetes, environmental projects. In recognition of her service, she received numerous awards including Kjarans Medal, the highest Award of Icelandic Lions, eleven International President's award, the Ambassador of Goodwill award, the highest Lions Clubs International award several membership and extension award. She is also a Progressive Melvin Jones Follow.

**"Lions Serve where there's a need and that has nothing to do with gender".**

# *All Women's Lions Clubs*

**(Women's are leading, empowering & serving)**

In India there are lots of All Women's Lions clubs which has awesome women doing great things together. They inspire every one by showing that women can lead and make a big impact.

**Lions Club of Bangalore BTM Nightingale :** Charted in the year 2009. The club has 51 ladies, one of the signature project of the club is its maternity camp conducted on the first monday of every month of Indian heritage Centre, Koramangala, Bangalore. Pregnant women are screened by specialist doctors and are given multi vitamin tablets for the entire month, those who need further investigations are referred to the diagnostic labs. The entire cost is borne by the club. Pranayama and yoga sessions for the pregnant women for easy delivery is also started.

They also conducted many health camps, cardiac and diabetes screening camps, set up a cardiac centre in Marasur village, adopted the model government school in Koramangalla village, and tailoring classes were also started where free tailoring were taught to womens, every year 300 womens are trained.



# LIONS CLUB OF CHENNAI SRUTHI (Dist. 324-K.)



PMJF Lion Subhalakshmi Viswanath

We are very proud to present this Article about our Club, **Lions Club of Chennai Sruthi.** Thanks to Lion Deepalakshmi of Lions Club of Sivakasi. “Being a Lion means you are part of a compassionate community". We 45 members were in Lioness Club of Ambattur, and celebrated Silver Jubilee on 2003 and from thereafter, we 22 members decided to float the Lions Club of Chennai Sruthi. The Lions Club of Chennai Sruthi was inaugurated on 1st December 2003.

For the first 4-5 years, we suffered a lot to run the Club and then we decided to introduce our family members to our fold. Thereafter we are very comfortable. We are able to serve more needy people of the Society. Our Members are there in the Lionism for 45 years. They are PMJF Lion Pratima Balaraman and PMJF Lion Subhalakshmi Viswanath and there are few members are over 40 years, who are PMJF Lion Poongkodi, Lion Veda Kishore, Lion Sripriya. We received Charter Monarch Chevron Award from Lions International.

**Our Club is supporting the following pro|ects :**

1. Education Service
2. Old Age Home Service
3. Feed the Hunger
4. Diabetic Awareness
5. Healthcare
6. Eye Screening
7. Cleaning of Temples
8. Celebrations such as Womens Day, Childrens Day, Elders Day, Deepavali, Pongal, Gandhi Jayanti etc.
9. We have our permanent projects, viz., Borewell in Kachur Village, Thiruvallur District which provides water supply to

whole of the Village and a School.

10. Our Continuous Projects are :

(a) Feed the Hunger (b) Womens' Welfare



# பொதுக்குழுக் கூட்டம் (ஜனவரி)

லயன் A.அருண்குமார்



ஜனவரி மாதத்தின் இரண்டாவது பொதுக் குழுக் கூட்டம் 24.01.2024 அன்று நடைப்பெற்றது. 324-A மாவட்டத்தின் முதலாம் துணை ஆளுநர் PMJF லயன் Dr.P.அய்யாதுரை (Home Club : Lions Club of Sankarankoil) அவர்கள் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு சிறப்பித்தார்.

சிவகாசி அரசு மருத்துவமனையில் நமது சங்கத்தின் நிரந்திரத் திட்டமான குடிநீர் அமைக்கும் பணி நிறைவு பெற்றது. அதை முதலாம் துணை ஆளுநர் திறந்து வைத்தார். அரசு மருத்துவமனையில் இருந்த கர்ப்பிணிப் பெண்களுக்கு பிரட், பிஸ்கட், ஆரஞ்சு, ஆப்பிள், மாதுளை மற்றும் பேரிச்சம்பழம் வழங்கப்பட்டது.

லயன் சர்மிளி ரவீந்திரன் நடத்திய விளையாட்டுடன் கூட்டம் ஆரம்பமானது. சிறப்பு விருந்தினரை நமது முன்னாள் தலைவர் லயன் நாகராஜன் MJF, மேடைக்கு அழைத்து வந்தார். கொடி வணக்கத்தை லயன் சிவசங்கரும், அரிமா பிரார்த்தனையை லயன் ப்ரீத்தா சிவசங்கரும் வாசித்தார்கள். உலக அமைதிக்காக ஒரு நிமிடம் மௌனம் அனுசரிக்கப்பட்டது.

சங்கத் தலைவர் லயன் K.பிரபாகர் வரவேற்புரை வழங்கினார், செயலாளர் லயன் P.நித்தியபாண்டி ஜனவரி மாதத்தின் செயல்பாடுகள் மற்றும் சேவைகளைப் பற்றிக் கூறினார். சிறப்பு விருந்தினரை லயன் தேவி நித்தியபாண்டி சபைக்கு அறிமுகம் செய்தார்.

**PMJF லயன் Dr.P.அய்யாதுரை :** சாரல் மழை பொழிந்து, தூறல் மனதை வருடுகின்ற, செயற்கைச் சிறிதும் நுழையாமல் இயற்கை மகுடம் சூடுகின்ற தென்காசி மாவட்டத்தில், புதுஅப்பநேரி கிராமத்தில் பிறந்தவர். 2013-யில் தன்னை சங்கரன்கோவில் லயன்ஸ் சங்கத்தில் இணைந்து இன்று வரை சிறப்பாக பல சேவைகள் புரிகின்றார். 2017-18-ல் சங்கத்

தலைவராகவும், 2018-19ல் வட்டாரத்தலைவராகவும், 2019-20-ல் மாவட்டத் தலைவர்களுக்கு மாவட்ட தலைவராகவும், 2020-21-ல் மாவட்ட தலைவர் சேர்மனாகவும், 2021-22-ல் DC for PST Guidance ஆகவும் பல பொறுப்புகளுக்கு பெருமை சேர்த்தவர். Best president award; Best zone chairperson award, Best model club International award, Best No.1 all rounder award என்று பல விருதுகள் பெற்றுள்ளார்.

**முதலாம் துணை ஆளுநரின் உரை :** எனது தாய் சங்கத்திற்கு முதலாம் துணை ஆளுநராக வந்ததற்கு பெருமை கொள்கின்றேன். மதிப்பிற்குரிய PDG MJF லயன் A.வைரப்பிரகாசம் ஐயாவும், மற்ற மூத்த உறுப்பினர்களும், தற்போதைய முத்தலைவர்களின் செயல்பாட்டிற்கும், சேவைத் திட்டங்களுக்கும் மனமார்ந்த வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

அரசு மருத்துவமனையில் செய்த நிரந்தர சேவைத் திட்டங்கள் பொதுமக்களுக்கு மிகவும் பயனுள்ளதாகவும் அவர்களின் நல்வாழ்வை மேம்படுத்துவதாகவும் இருக்கின்றது. சங்கத்தின் அனைத்து சேவைத் திட்டங்களும் சமூகப் பொறுப்பின் அசைக்க முடியாத அர்ப்பணிப்பைக் காட்டுகின்றது.

ஒரு இரயில் பயணத்தின் போது சென்னை தாம்பரம் மாநகர சட்டம் ஒழுங்கு காவல் இணை ஆணையர் முனைவர் பா.மூர்த்தி அவர்களை சந்தித்தேன். அவருடன் நட்பு வளர்ந்தது. Dr.மூர்த்தி அவர்களின் சொந்த ஊர் திண்டுக்கல் மாவட்டம், வக்கம்பட்டி, தனது பெற்றோரின் பூர்வீக வீட்டை அவர்கள் மறைந்த பின், அவர்களின் ஆசைப்படி பாலா படிப்பகம் என்றொரு நூலகத்தைக் கட்டினார். அங்கு மாணவர்கள் போட்டித் தேர்வுகளுக்குப் படிக்கத் தேவையான நூல்கள், சிறு பிள்ளைகள் வாசிக்க குழந்தைப் புத்தகங்கள், பெரியவர்கள் வாசிக்க பொது நூல்கள் என பல புத்தகங்களை திண்டுக்கல் உதயா லயன்ஸ் சங்கம் வழங்கியது. தங்கள் ஊரில் உள்ளவர்கள் மட்டுமின்றி தங்கள் ஊரைச் சுற்றியுள்ள மாணவர்களும் நூலகத்திற்கு வந்து படித்துப்பயன் பெறுகின்றார்கள் என்றார். தற்போது Dr.மூர்த்தி அவர்கள்

எங்கள் தென்காசி மாவட்டத்திற்கு மாற்றலாகி வந்துள்ளார். அவரின் மனிதநேய சேவைகள் தொடர வாழ்த்தினேன்.

உலகில் மிகவும் மகிழ்ச்சியான மனிதன் யாரென்றால், பிறரை மகிழ்ச்சியோடு வைத்திருப்பவர் தான். நமது லயன்ஸ் சங்கம் மூலம் பிறருக்கு சேவை செய்து மகிழ்ச்சியடைவோம்.

**நேற்று என்பது உடைந்த பானை**

**நாளை என்பது மதில் மேல் பூனை**

**இன்று என்பது நம் கையில் இருக்கும் வீணை**

**மீட்டுவோம் மகிழ்ச்சியாக...**

**அனுபவிப்போம் ஆரோக்கியமாக.**

**சேவைகள் :** அன்றைய சேவைகளாக அரிசிப்பைகள், சேர்கள், மரக்கன்றுகள், கல்வி உதவித்தொகை மற்றும் மருத்துவ உதவித்தொகை வழங்கினோம்.

நமது சங்கத்தின் ஏழாவது மாத இதழ் வெளியிடப்பட்டது இந்த மாதம் பிறந்த நாள் மற்றும் திருமண நாள் கொண்டாடும் உறுப்பினர்களுக்கு greater Committee Chairperson லயன் தீபா அருண்குமார் வாழ்த்துக்கள் கூறினார், அவர்கள் கேக் வெட்டிக் கொண்டாடினார்கள். Tail twister விளையாட்டில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசுகள் வழங்கப்பட்டது, Early Bird award-ஐ லயன் T.இம்பாலா மற்றும் ரத்தின சரஸ்வதி இம்பாலா கொடுத்தார்கள். பொருளாளர் லயன் P.சுதாகரன் நன்றியுரை கூற தேசிய கீதத்துடன் கூட்டம் நிறைவு பெற்றது.

























*Touch the Heart by Service*

# இராஜராஜன் மண்டல மாநாடு

**லயன் கோதை செந்தில் வேலவன்**



நமது மாவட்டத்தின் இராஜராஜன் மண்டல மாநாட்டை டான் பாமா திருமண மண்டபத்தில் வைத்து 04.02.2024 அன்று மண்டலத் தலைவர் லயன் K.நாகராஜன் சிறப்பாக நடத்தினார். பாரம்பரியத்துடன் மாநாடு துவங்கியது. மொத்தம் 688 உறுப்பினர்கள் கலந்து கொண்டார்கள்.

- Flag Salutation - Lion G.Ramalingam Lions Club of Sivakasi Indus Town Zone Chairperson Zone Jack Fruit Tree.
- Lions Prayer - Lion Manavalan, Lions Club of Sivakasi Pearls Spark.
- One Minute Silent invocation for world peace.
- Lions club International objects - Lion P.K.Subbiah, Lions club of Watrap.
- Lions Code of Ethics - Lion L.Kumaravel Rajan, Lions club of Virudhunagar என்று முறைப்படி அனைவரும் வாசித்தார்கள்.
- மாநாட்டில் பங்கேற்ற அனைவரையும் Lion MJF P.காமராஜ் (Steering Committee Chairperson) வரவேற்றார்.
- Banner Presentation by all the clubs அத்தருணம் நமது சங்கம் பல சேவைத்திட்டங்களை நிறைவேற்றியது குறிப்பிடத்தக்கது.
- அன்றைய சேவையாக அரிசிப் பைகள், காது கேட்கும் கருவி, மரக்கன்றுகள், கல்வி உதவித் தொகை, மருத்துவ உதவித்தொகை, கண் கண்ணாடி, 10 சேர்கள், கண் புரை அறுவை சிக்சைக்கு ரொக்கப் பணம், 25 நபர்களுக்கு போர்வைகள், லேப் டாப் என்று வழங்கினோம்.
- நமது தேசியக் கொடியை திருத்தங்கல் அரிமா பள்ளி மாணவர்கள், சகல வாத்தியங்களுடன் அணி வகுப்புடன் ஏந்தி வந்து நமது மண்டல மாநாட்டில் பட்டொளி வீசிப் பறந்திடச் செய்தனர்.

- முத்தாய்ப்பாக மாநாடு தொடங்கிட தீப ஒளி பெற, லயன் பிரமிளா ரவி MJF, லயன் சங்கீதா, லயன் சித்ரா, லயன் விஜய சாந்தி, லயன் செல்வி ஆகியோர் குத்துவிளக்கு ஏற்றினர்.
- தனக்கே உரித்தான தனித்துவமான தமிழில் Lion M.இராமமூர்த்தி அவர்கள் மாவட்ட ஆளுநரை அறிமுகம் செய்தார்.
- மாவட்ட ஆளுநர் தனது உரையில், இதுவரை நடந்திட்ட சேவைத் திட்டங்கள் பற்றியும் இனி செயல்படுவதையும் அனைவரும் புரியும் வண்ணம் விளக்கினார்.
- வழக்கம் போல் செந்தமிழில் Lion Er.N.சிவபிரான் மண்டலத் தலைவரை அறிமுகம் செய்தார்.
- மண்டலத் தலைவர் தன் உரையில், அவரது மண்டலத்தின் கீழ் செயல்பட்ட அனைத்து சங்கங்களையும் வாழ்த்தினார். மேலும் தான் ஏற்றிட்ட பதவி, பணியினை செவ்வனே செய்த திருப்தி இருப்பதாகத் தெரிவித்தார்.
- லயன் S.A.சுப்பையா தனது அறிக்கையை சமர்ப்பித்தார்.
- 688 லயன்ஸ் உறுப்பினர்கள் பதிவு செய்ததை தெரிவித்தார்.
- முத்தான முன்னாள் ஆளுநர்கள் வாழ்த்துக்களை பகிர்ந்தது மட்டுமல்லாமல், தமது ஆலோசனைகளையும், கருத்துக்களையும் தெரிவித்தனர்.
- லயன் தீபா அருண்குமார் சிறப்பு விருந்தினரை அசாதாரணமாக அறிமுகம் செய்தார்.
- Dr.P.லெனின் முத்துராஜ் அவர்கள் சிறப்புரை ஆற்றினார்.
- லயன் கோதை செந்தில் வேலவன் சிறப்பு பேச்சாளர் Dr.A.T.ஆஷாலெனின் அவர்களை அறிமுகம் செய்தார்.
- அவர் தனது உரையில், எந்த ஓர் நோய்க்கும் இயற்கை வழி மருத்துவம் இருப்பதாகவும், "உணவே மருந்து" எனவும் தெரிவித்தார்.
- நமது சங்கத்திற்கு இரண்டு விருதுகள் கிடைத்தது. ஒன்று


maximum registration (105) மற்றொன்று banner Presentation-ல் இரண்டாவது இடம்.

- கடந்த ஆண்டு சிறப்பாக செயல்பட்டதற்காக இதுவரை நமது மாவட்டம் பெறாத அளவிற்கு 90 சங்கங்களுக்கு Excellence award-யும், 10 மண்டலத் தலைவர்களுக்கும், 32 வட்டாரத் தலைவர்களுக்கும் Excellence award-யும் பெறப்பட்டது. இதை IPDG லயன் N.K.விஸ்வநாதன் PMJF அவர்கள் அனைவருக்கும் வழங்கினார்.
- இறுதியாக நினைவுப்பரிசுகள் வழங்க பலர் வாழ்த்துக்களை கூற, Lion A.K.A.செந்தில்குமார் நன்றி நவில மாநாடு இனிதே முடிவடைந்தது.
- மிகச்சிறப்பாகத் தொகுத்து வழங்கிய லயன் ராதிகா தேவி முருகையன், லயன் செல்விராஜ் கோபால், லயன் ஷர்மிளி ரவீந்திரன் ஆகியோரை அனைவரும் பாராட்டினார்.
- மாநாட்டில் மனமும், தோழர்களுடன் பல விசயங்களை பகிர்ந்த சந்தோசத்துடன், நினைவுப்பரிசு பெற்ற மகிழ்ச்சியுடன் வந்த நமக்கு நமது அண்ணாச்சி லயன் சிவசுப்பிரமணியம் அவர்கள் தலைமையில் அறுசுவை உணவு உள்ளம் குளிர வைத்தது. இனிதே எல்லோரும் விடை பெற்றோம்.




Tanfama Hall,
Sivakasi.




: Tanfama Hall,
Sivakasi.
LIONS CLUB


LIONS CLUB


Shot on OnePlus
Shot By Nithiyapandi | Sivakasi


மண்டல


CLUB



# SPORTS CLUB REPORT

*Lion Karunaimani Inbasagaran*



Good evening all with immense pleasure I thank Meera Aunty and Selvikka for giving me this opportunity as the chairperson of Lions sports club. Our club have 33 members. We used to play shuttle cork and throw ball every evening by 4:30 p.m. That's our garden time to play, relax and laugh together and make healthier mentally and Physically.

We have throwball matches every month hosted by One of our members. I whole heartedly thank Lathakka, Prema Miss, Meera aunty, Selvikka, Sankaribalakka J.Hamakka and S.Hemakka for hosting the matches for the past months. We celebrated 60th Birthdays of Nalinikka, Hamakka and Sridevi Mam.

As a part of Ladies night celebration we conducted shuttle matches for Men from Jan 3, 2024. Our Lion participated in Men singles, Men doubles and mixed doubles matches. We have Ladies & Gents throwball match on Jan 8. As usual we won the match. A special thanks to the coordinators Lion Dr.Jeyapal, Lion Murugaian and Lion A.Inbasagaran for organsing these matches.

Ladies shuttle matches were on Jan 18, we had Junior, Senior held and super senior matches on that day. Our Annual throwball match was on Jan 22. I thank all sports club members for their kind cooperation and support for me.

My co-chairpersons selvikka, Visalakshikka, Hemakka and Jayakka. Thank you all for always being my greatest supporters. I am very happy to be a part of Lions Sports club family.

Thank you one and all.

# என் நினைவலைகள்

**லயன் சித்ரா குணசேகரன்**



என் அன்பு அரிமா சகோதர, சகோதரிகள் அனைவருக்கும் என் அன்பான வணக்கம். நான் சிவகாசி அரிமா சங்கத்தில் 1980-ல் சேர்ந்தேன். 44 வருடங்கள் நிறைவு பெற்றது. எப்படி நிறைய தொண்டுகள் செய்வது, எப்படி எல்லோரிடமும் பழகுவது, எப்படி ஒற்றுமையா இருப்பது என்பதை நமது லயன்ஸ் நண்பர்களிடமிருந்து கற்றுக் கொண்டேன்.

நான் சிவகாசியில் முதலில் மீரா அக்காவின் அடுத்த வீட்டில் இருந்தேன். அப்போது நாகர்கோவிலில் தமிழ்நாடு அளவில் நடைபெற்ற லயன்ஸ் உறுப்பினர்களுக்கான பேஷன் பரேடில் கலந்து கொள்ள மீரா அக்கா ஊக்கமளித்தார்கள். 150 நபர்களுக்கு மேல் கலந்து கொண்ட போட்டியில் நமது சங்கம் சார்பாக சென்று முதல் பரிசு பெற்றேன். மட்டற்ற மகிழ்ச்சியடைந்தேன்.

முதலில் ஸ்போர்ட்ஸ் கிளப்பில் 12 உறுப்பினர்கள் சேர்ந்து ஷட்டில் கார்க் விளையாடினோம். என்னையும் லயன் மதனா ராமமூர்த்தியையும் நமது உறுப்பினர்கள் ஊக்குவித்து முதன் முதலில் இராஜபாளையத்தில் நடைபெற்ற ஷட்டில் போட்டியில் விளையாடச் செய்தாரர்கள், அதில் கலந்து கொண்டு வெற்றி பெற்றோம். பின் 1988-89ல் மதுரையில் நடந்த All India tournament-ல் நானும் மதனா ராமமூர்த்தியும் கலந்து கொண்டு வெற்றி பெற்றோம். தொடர்ந்து இரண்டு வருடங்கள் வெற்றியை பெற்றோம்.

A.J.ஸ்டேடியத்தில் லயன்ஸ் சங்கம் மிக விமர்சையாக நடத்திய போட்டியில் நானும் லயன் ஹோமா சங்கரும் விளையாடி வெற்றி பெற்றோம். பின் திருநெல்வேலியில் நடைபெற்ற போட்டியிலும் கலந்து கொண்டு வெற்றி பெற்றோம்.

என் தாய் வீடு இங்கு கிடையாது, அரிமா சங்கத்தை தாய் வீடாக மதித்தேன். பல இடங்களுக்கு சேவைகள் செய்ய நானும்,

மீரா அக்கா, ஜோதிபாய் அக்கா, அமர்ஜோதி அக்கா, சாவித்திரி அக்கா, சித்திரலேகா அக்கா என அனைவரும் ஒற்றுமையாக செல்வோம். மனதிற்கு திருப்தியாகவும், மகிழ்ச்சியாகவும் இருக்கும்.

தூத்துக்குடி ஸ்பிக் நகர், தளவாய்புரம், சிவகாசி பெண்கள் மேல்நிலைப்பள்ளி, லயன்ஸ் பள்ளி, ராம்கோ சிமெண்ட் போன்ற இடங்களில் நடைபெற்ற Throw ball Match–க்கு நாங்கள் குழுவாக சென்று பல பரிசுகள் பெற்றுள்ளோம். மேலும் நானும் செல்வியும் பல Chines Checker போட்டிகளில் பரிசு வென்றோம்.

குற்றாலம் அருகில் உள்ள தோரணமலை மற்றும் ஸ்ரீவில்லிபுத்தூர் அருகில் உள்ள திருவண்ணாமலைக்கு பாத யாத்திரை சென்ற நினைவலைகள் என்றும் மனதிற்குள் நிலைத்திருக்கும்.

எங்கள் ஸ்போட்ஸ் கிளப் உறுப்பினர்கள் அனைவரும் ஒரே குடும்பமாக வாழ்ந்து வருகின்றோம். மாலைப் பொழுது எப்போது வரும் என்று ஆவலுடன் காத்திருப்போம். Shuttle மற்றும் throw ball விளையாடி விட்டு புத்துணர்ச்சியுடன் வீடு திரும்புவோம். கொரோனா காலக்கட்டத்தில் விளையாட செல்லாமல் இருந்தது, கவலையாக இருந்தது.

ஏழைப் பெண்களுக்கு திருமணம் முடித்து வைத்தேன். இன்று அவர்கள் சீரும் சிறப்பாக வாழ்ந்து வருகின்றார்கள் என்பதைப் பார்ப்பதற்கு மிகவும் மகிழ்ச்சியாக உள்ளது. ஒரு கோயிலுக்கு கும்பாபிஷேகம் செய்து வைத்தது போல உணர்ந்தேன்.











# LADIES NIGHT CELEBRATION

**லயன் பவானி சுதிர்**



அனைவருக்கும் என் இனிய இனிய வணக்கங்கள். Ladies Night celebration என்பது நம் சிவகாசி லயன்ஸ் சங்கத்திற்கே ஒரு திருவிழா என்பது ஒரு தனிச்சிறப்பு. இந்த திருவிழாவை நடத்துவதற்கு என்னை Ladies night chairperson-ஆக நியமித்த லயன் மீராவைரப்பிரகாசம் அம்மா அவர்களுக்கு என் முதற்கண் பணிவான வணக்கங்கள். என்னால் முடியும் என்று என்னை நம்பி இப்பொறுப்பை ஒப்படைத்த அவர்களுக்கு என் மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன். என்னுடன் துணைபுரிந்த Co-Charman-ஆன லயன் விசாலாட்சி பாஸ்கரன். லயன் தமிழரசி குருமோகன், லயன் திருசெல்வி டென்சிங், லயன் சர்மிளி ரவீந்திரன் இவர்களுக்கும் என் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

இந்த திருவிழாவை அலங்கரிக்க பெண் உறுப்பினர்கள் அனைவரும் Uniform Saree எடுக்கும் பணி நவம்பர் மாதமே லயன் தமிழரசி குருமோகன் அக்காவுடன் தொடங்கினேன்.

புது வருடம் தொடங்கியவுடன் என்ன போட்டிகள் வைக்கலாம் என்று அனைவரிடமும் கேட்க தொடங்கினேன். லயன் ராதிகா அக்கா எனக்கு முழு ஆதரவு கொடுத்தார்கள். பல போட்டிகளுக்கு topic தேர்ந்தெடுக்க எனக்கு உதவினார்கள். ஜனவரி முதல் வாரத்தில் அனைத்து அரிமாக்களுக்கும் போட்டிக்கான நோட்டீஸ் அனுப்பப்பட்டது.

தினமும் மதியம் முதல் லயன்ஸ் கிண்டர் கார்டனில், பாட்டு மற்றும் நடனத்திற்கு practice செய்யத் தொடங்கினோம். Sports club உறுப்பினர்கள் தாங்கள் விளையாடி முடித்தவுடன் பாட்டுக்கான practice-ஐ ஆரம்பிப்பார்கள். லயன் தீபா சுதாகரன், லயன் தேவி நித்தியபாண்டி, லயன் ராஜராஜேஸ்வரி விக்னேஷ் என்னுடன் dance practice-க்கு நேரம் ஒதுக்கி சிறப்பாக முடித்துக் கொடுத்தார்கள்.

பிப்ரவரி 8, 9 என்று இரண்டு தேதிகளில் தனது தனித்திறமையை காண்பித்து நாடகத்தை சிறப்பாக அரங்கேற்றிய லயன் திலகேஸ்வரி ராஜு, லயன் கருணைமணி இன்பசாகரன், லயன் கோதை செந்தில் வேலவன், லயன் ராதிகாதேவி முருகையன் அவர்களுக்கு மிக்க நன்றி.

பிப்ரவரி 9ஆம் தேதி மதியம் 1.00 மணியளவில் போட்டிகள் தொடங்கியது.

1. Samayal rani sweet - Fire free Cooking
2. Samayal rani karam - Chapathi varieties
3. Pulli Kolam topic - Star
4. Rangoli topic - Cake
5. Vegetable painting topic - Scenery
6. Lion super singer topic - Cine song starting with the word "கண்"

அனைத்து அரிமாக்களும் போட்டியில் மிக ஆர்வத்துடன் கலந்து கொண்டு தங்களது திறமைகளை வெளிப்படுத்தினார்கள். மாலை 7.00 மணியளவில் நிகழ்வுக்கான ஒத்திகை நடைபெற்றது.

10.2.2024 சனிக்கிழமை மாலை 6.00 மணியளவில் நிகழ்ச்சி ஆரம்பிக்கப்பட்டது. நிகழ்ச்சியை மிகவும் சிறப்பாக லயன் ராதிகாதேவி முருகையன் மற்றும் லயன் Dr.தீப்தா மதி ஹேமந்த் அவர்களும் சிறப்பாக தொகுத்து வழங்கினார்கள். கொடி வணக்கத்தை லயன் பிரியமாலா ஸ்ரீதரும், லயன்ஸ் வழிபாட்டை லயன் ப்ரீத்தா சிவசங்கரும் வாசித்தார்கள். உலக அமைதிக்காக ஒரு நிமிடம் மௌனம் அனுசரிக்கப்பட்டது. தலைவர் லயன் K.பிரபாகர் வரவேற்புரை வழங்கினார்.

தொடர்ந்து Sports Committee chairperson லயன் கருணைமணி இன்பசாரன் அவர்கள் இந்த ஆண்டின் அறிக்கையை வாசித்தார்கள். பின் Ladies Committee Chairperson ஆகிய நான் நிகழ்ச்சி அறிக்கையை சமாப்பித்தேன்.

அன்றைய சிறப்பு விருந்தினர் – திருமதி.ஷர்மிளா தேவி

பௌன்ராஜ் (founder - seven clover, Madurai, NLP Master Coach) அவர்களை லயன் ஷர்மிளி ரவீந்திரன் அறிமுகம் செய்தார். ஷர்மிளா தேவி தன்னுடைய உரையில், பெண்கள் எவ்வளவு திறமையானவர்கள் என்பதை அவர்களின் செயல்களில் பார்க்க முடியும் என்று அருமையாக விளக்கம் அளித்தார். போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசுகள் வழங்கப்பட்டது.

பிறந்த நாள் மற்றும் திருமண நாள் கொண்டாடும் உறுப்பினர்களுக்கு Greater Committee Chairperson லயன் தீபா அருண்குமார் வாழ்த்துக்கள் கூற, அவர்கள் கேக் வெட்டி இனிய தருணத்தைக் கொண்டாடினார்கள்.

கலை நிகழ்ச்சிகளாக லயன் ரேணுகாதேவி முத்துக்குமரன் பரதநாட்டியம் ஆடினார். பின் பெண் உறுப்பினர்களின் குழுப்பாடல், லயன் கோகிலா விஜயகுமாரின் பாடல், நடனம், நாடகம் என்று சிறப்பாக நடைப்பெற்றது.

இந்த விழாவின் மிகப்பெரிய high light ஆண் உறுப்பினர்களின் நாடகம் தான். வருடா வருடம் அவர்களின் நாடகம் அனைவரையும் வயிறு குலுங்க சிரிக்க வைக்கும். யார் எந்த வேடத்தில் இருக்கின்றார்கள் என்பதை கண்டுபிடிப்பதற்குள் நாடகம் முடிந்து விடும். இனிய விருந்தோம்பலுடன் விழா இனிதே நிறைவு பெற்றது. நிகழ்ச்சிகளை சிறப்பாக நடத்திக் கொடுத்த நம் உறுப்பினர்கள் அனைவருக்கும் என் நன்றிகள் பல...








*Touch the Heart by Service*


LIONS CLUB OF SIVAKASI
LADIES NIGHT CELEBRATION
10-02-2024
SATURDAY

# ZONE ADVISORY AND INTER CLUB MEETING

**Lion K.Muraliraj (Joint Secretary)**



The Third Zone Advisory Committee meeting held on 11.02.2074 (sunday), 10:30 am at the Sivakasi Lions Junior school. All the members enthusiastically participated in the Tail twister game.

Zone Inter club meeting Commenced with the Flag salutation read by Lion A.Arunkumar (Lions Club of sivakasi) and the Lions prayer read by MJF Lion M.Manavalen (Lions club of Sivakasi Pearls Spark). One minute silence was observed for world Peace. Our president Lion K.Prabakar welcomed the gathering. The five clubs in our zone are Lions Club of Sivakasi, Lions Club of Sivakasi Cosmos, Lions Club of Sivakasi Pearls Spark, Lions Club of Perfect Kings; Lions club of Kovilpatti Dynamic. Lion M.Ramamoorthy from Lions Club of Sivakasi gave a short introduction about our Zone Chairperson MJF Lion M.Stephen

Zone Chairperson addressed the members, further he expressed his heart felt appreciation to all the five clubs for their exemplary service to the community inspiring others and setting a standard of excellence for the entire district.

The secretaries of all the five clubs shared inspiring insights into the diverse range of activities and services conducted by their respective clubs, highlighting their achievements and milestones reached throughout the year.

The presidents of all five clubs shared about their upcoming activities and about their new service projects, our club president Lion K.Prabakar highlighted about our plan for

the Interstate Inter Club Meeting and also about our on going project Lions International School, which is first in our Virudhunagar District.

Region Chair person lion K.Nagaraj expressed his heartfelt gratitude to all, for their valuable contributions in making the Raja Rajan Region meeting a resounding success.

Our Past President Lion D.Prabakaran PMJF shared insights from his recent attendance at GIVE Conclave in Mumbai. He reflected on the enriching experiences and valuable knowledge gained from the event, highlighting the significance of collaboration and innovation in service.

We donated BP apparatus, glucometer and chairs to the alamarathupatti government hospital and a Iron box to needy person.

Zone Chairperson gave mementos to the office Bearers and our president also gave mementos to the Region Chairperson, Zone Chairperson and to all the club members. The winners of the tail twister games were given a prize. Treasurer Lion P.Sudhakaran thanked every one for attending the meeting. Finally the meeting concluded with the national anthem followed by the delicious lunch.















*Touch the Heart by Service*

# Unveiling Lions School Activities

## 16th January 2024 to 15th February 2024

**Academics :** The Unified Maths Olympiad Examination 2024 was held for the students of Std III to VIII.

**Sports Achievements :** Our students exceptional performance and enthusiastic participation in a wide range of sports tournaments like Boxing, Aero Skato ball championship, sakating, ball badminton, chess, Yoga, athletics, abocus, archery tournament and achieved remarkable success and brought numerous prizes and accolades.

**Functions :** 75th Republic Day was celebrated in a grand manner in the junior school on Friday, 26th January 2024. Correspondent Lion J Ramesh Kumar accepted the flag respect, honour and delivered his Chief Guest Address. President Lion K Prabakar welcomed the gathering. Principal Mr MG Pandian delivered his message. Students from I to XI performed the various programs such as speeches, dances, enacted a skit and sang a patriotic song. Primary Incharge Mrs B Mercy proposed the vote of thanks.

Green Day was celebrated in the junior school. The joyful kids of JKG and SKG performed a variety of cultural programs in the presence of parents and the Primary Incharge Mrs B Mercy. The inauguration ceremony of Cubs & Bulbuls and Bunnies & Buddies was held in the Sivakasi Lions Nursery & Primary School.

**Others :** Kamaraj Grand Festival 25 conducted by Kamarajar Engineering College and Technology, Virudhunagar. Group Western, Silambam, Rangoli, Model Making, Best from Waste Online objective Test 2024 was conducted by National Engineering College, Kovilpatti five of our students got cash award.

KSL Media Ltd conducted “Nalaya Vingnani 2023” at National Engineering College, K R Nagar, Kovilpatti our

students submitted their research and got II prize in Kovilpatti Region.

The Times of India and VIS (Vellore International School) conducted NIS Vista Ideathon 2023-24. In the competition around 480 teams from various schools took part. Of the 480 teams, they shortlisted 25 teams for the second round. In these 25 teams, 2 teams from our school were selected. Our teams were requested to present their project through online. Our Students got 6th position with 1500 rupees cash award.

Career guidance programme was organised by DEO Pvt Schools with Karpagam Institutions, Coimbatore at our Senior campus various school students participated in the programme.

Fancy Dress Competition was held for the students of Pre KG to SKG in the junior school on Saturday, 3rd February 2024. Principal Mr MG Pandian welcomed the gathering. President Lion K Prabakar presented his special address. Correspondent Lion J Ramesh Kumar distributed the prizes. Primary Incharge Mrs B Mercy proposed the vote of thanks.

2022-2023 Board examination 100% result award programme organised by the CEO, Virudhuangar & District Collector at our Senior Campus on 05.02.2023. All the Sivakasi and Virudhunagar Educational District Government schools Head Masters & Teachers were appreciated with Certificate by the Collector, CEO, DEO.



Republic Day

# *A Birthday Blessing*

**இனிய லயன்ஸ் நண்பர்களே...**

**வருடங்கள் பிறக்கலாம்...**

**நிமிடங்கள் மாறலாம்...**

**நொடிகள் கரையலாம்...**

**ஆனால் உங்களின் தீராத அன்பிற்கும், அளவில்லா சேவைக்கும்**

**வருடங்கள் இல்லை...**

**நிமிடங்களும் இல்லை....**

**நொடிகளும் இல்லை...**

**தினம் தினம் பிறக்கட்டும் உங்கள் பிறந்தநாள்...**

**பலநூறு வண்ணங்கள் உங்கள் கனவுகளை சுவைக்கட்டும்...**

**இனிய பிறந்தநாள் நல்வாழ்த்துக்கள்!**

**வாழ்க பல்லாண்டு...**



Lion Sridevi Shenbagarajan
01.02.1964



Lion S.Selvaraj
04.02.1974



Lion A.Nagarajan
06.02.1964



Lion S.Sudhir @ Raja
13.02.1976



Lion D.C.B.Ashok Kumar
19.02.1957



Lion Tamilarasi Gurumohan
20.02.1957



Lion R.S.Brijraj
26.02.1976



Lion Murugambal Rajagopal
27.02.1955



Lion Poorna Senthiammal Arumugasamy
27.02.1986

## Birthday Riddle

| A | B | C | D | E | F | G | H | I | J | K | L | M |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| ↕ | ↕ | ↕ | ↕ | ↕ | ↕ | ↕ | ↕ | ↕ | ↕ | ↕ | ↕ | ↕ |
| N | O | P | Q | R | S | T | U | V | W | X | Y | Z |

If HELLO is coded as URYYB

Find : UNCCL OVEGUQNL QRNE YVBAF...

# திருமண நாள் வாழ்த்துக்கள்...



ஊரே வியக்கும் வண்ணம்
சிறந்த அன்பு கொண்ட நேசங்களால்
திருமண வாழ்க்கையின் அர்த்தத்தை
உணர்ந்து வாழும் தம்பதிகளே
இல்லறத்தில் புரிதல் உணர்வுடன்,
இரு நெஞ்சங்களும் சுற்றத்தாரின் வாழ்த்துக்களோடு
நூறாண்டு காலம் வாழ்ந்திட வாழ்த்தும்
உங்கள் இனிய லயன்ஸ் நண்பர்கள்...

| | | |
|---|---|---|
| 1. | லயன் P.சுதாகரன் – தீபலட்சுமி | 03.02.2002 |
| 2. | லயன் C.சிரஞ்சீவிராஜ் – ஜெயந்தி | 03.02.2006 |
| 3. | லயன் A.N.ராமசாமி – உஷா ராணி | 05.02.1973 |
| 4. | லயன் N.மகேஸ்வரன் – மதுபாலா | 07.02.1999 |
| 5. | லயன் D.பிரபாகரன் PMJF – ராதிகா தேவி | 12.02.2003 |
| 6. | லயன் A.பிரகஸ்பதி – ரேவதி | 12.02.1971 |
| 7. | லயன் J.விக்னேஷ் – சிந்துஜா | 19.02.2010 |
| 8. | லயன் S.சுதிர் ராஜா – பவானி | 21.02.2003 |
| 9. | லயன் G.முத்துகுமார் – ரேணுகா தேவி | 22.02.1998 |
| 10. | லயன் VID அமலானந்த் – வென்ல்ஸ் அமலோற்பவம் | 24.02.2000 |

***Birthday Riddle***

**Ans : Happy Birthday Dear Lions**



**Lion Deepa Arunkumar**
**Greeter Committee Chairperson 2023-24**

# வாழ்த்து பகுதி



இதயம் நிறை அன்பு கொண்ட இதழாசிரியர் லயன்.தீபலட்சுமி சுதாகரன் அவர்களுக்கு நாகர்கோவில் பிடிஜி லயன் டாக்டர் எஸ்.ஆர்-ன் வணக்கம்.

அட்டைப்பட சேவைத்திட்டங்கள் நெஞ்சை நெகிழ வைக்கின்றது. இவ்வளவு பயன்படும் வகையில் விளம்பரங்கள் வெளியிடும் சஞ்சிகை தங்கள் இதழே! புகைப்படங்கள். சிவகாசிக்கே சொந்தம்!!

பிறந்த நாள் திருமண நாள் கொண்டாடும் சங்க உறுப்பினர்களை கருத்தாழமிக்க கவிதைகளோடு வாழ்த்துவது தனிரகம். வழக்கம் போல் பள்ளி நிகழ்வுகளை பிரின்சியால் பொருத்தமான நிழற் படங்களோடு சிறப்புற பொறித்துள்ளார்கள்.

இவ்வளவு சிறப்பாக சுகாதார அமைப்பை வலுப்படுத்தும் சங்கம் நம் மாவட்டத்தில் வேறு இல்லை. பசுமை மன்றத்தின் எதிர்கால இலக்குகள் நாட்டு நலனின் உச்சம்.

ஆழமான பொதுநலன் கருதி இலவச மருத்துவமுகாம் நடந்துள்ளது என்பதனை Lion.Sivapiran விளக்கியுள்ளார்கள். இரண்டு பொதுக்குழு கூட்டமும் முறையாக சிறப்பாக தொடர்ந்து நடைபெறுகின்றது என்பதனை லயன்ஸ் முத்துக்குமரன், தேவி சிறப்புடன் பதித்துள்ளார்கள்.

கூட்டு மாவட்ட தலைவர் முத்தையா, அவர்கள் உங்கள் சங்கத்தைப் பற்றிய உண்மையை உரக்கச் சொல்லியுள்ளார்கள். கூட்டு மாவட்ட செயலாளர் IPDG Lion.NKV-சாதனை பட்டியல் பாராட்டிற்குரியது. சங்க, வட்டார, மண்டல மாவட்ட கூட்டு மாவட்ட, உலக லயன்ஸ் செய்திகள் என செய்திகள் ஜொலிக்கின்றன.

Rose Parade, Melvin Jones தெரிய வேண்டிய அரிய செய்திகள். அவரவர்கள் அவரவர்களுக்குரிய நேரத்தில் தான் இருக்கின்றோம் முயல்வோம்! சாதிப்போம்!! என தனிப் பாராட்டிற்குரிய விதத்தில் உங்கள் தலையங்கம் சொல்கிறது. முத்தலைவர்கள் வரிசையில் தொடர்கின்றனர்.

சங்க இதழோடு விளையாடும் உங்கள் திறமை அபாரம்.

*வாழ்த்துவது வாயல்ல இதயம்*

***Lion PDG.Dr.S.Rajendran.MBBS.,D.Lit.,*** (for Social Service),
நாகர்கோவில்